# 5. லகர, ளகர, ழகர வேறுபாடு
# னகர, ணகர வேறுபாடு
# ரகர, றகர வேறுபாடு

## லகர, ளகர, ழகர வேறுபாடு

- குளவி - வண்டு இனம்
- குழவி - குழந்தை

- வாளை - மீன்வகை
- வாழை - மரவகை

- வெல்லம் - இனிப்புப் பொருள்
- வெள்ளம் - நீர்ப்பெருக்கு

- அலை - கடல் அலை, அலைதல்
- அழை - கூப்பிடு, வரவழைத்தல்
- அளை - புற்று, தயிர், பிசை

- இலை - மரம், செடி, கொடிகளின் இலை
- இழை - நூல் இழை, செய்
- இளை - (உடல்) இளைத்தல், மெலிந்து போதல்

- விலை - பொருளின் மதிப்பு
- விளை - உண்டாக்குதல்
- விழை - விரும்பு

- உலை - சமைக்க உலை வைத்தல், உலைக்களம்
- உழை - பாடுபடுதல், உழைப்பு
- உளை - உளைச்சல், பிடரி மயிர், சேறு

- கலை - கவின் கலைகள், கலைந்து போதல், கலைத்திறன், வித்தை
- கழை - மூங்கில்
- களை - நீக்கு, எடு, பயிர்க்களை, பொலிவு, அழகு, முகத்தின் ஒளி

- அலகு - பறவையின் மூக்கு
- அழகு - கவின், வனப்பு, எழில்
- அளகு - பெண் மயில், சேவல்

- வால் - விலங்குகளின் ஓர் உறுப்பு; வெண்மை
- வாழ் - வாழ்த்துதல், வாழ்தல்
- வாள் - போர்வாள் (ஒரு கருவி), ஒளி

- தால் - நாக்கு
- தாழ் - தாழ்ச்சி
- தாள் - பாதம்

- ஆல் - ஆலமரம்
- ஆழ் - ஆழம்
- ஆள் - நபர்

- வளம் - செல்வம், செழிப்பு, மிகுதி
- வலம் - சுற்றுதல், வலப்பக்கம்

- களம் - இடம்
- கலம் - பாத்திரம்

- கிளி - ஒரு பறவை
- கிலி - அச்சம், பலம்

- மலை - குன்று
- மழை - மழைநீர்

- தளை - கயிறு, விலங்கு
- தழை - இலை, தழைத்தல்
- தலை - உறுப்பு

- வலி - வலிமை, வலித்தல், துன்பம்
- வளி - காற்று
- வழி - பாதை

- களி - மகிழ்வு
- கலி - சனி

- விளி - அழைப்பு
- விழி - கண்விழி

- ஒலி - ஓசை
- ஒழி - அழித்துவிடு, தொலைத்து விடு
- ஒளி - வெளிச்சம், பதுங்கிக் கொள்

- கிலி - அச்சம், பயம்
- கிழி - துண்டாகக் கிழித்தல், கோடு கிழித்தல்
- கிளி - ஒரு பறவை

- தாலி - கணவன் மனைவிக்குக் கட்டும் சின்னம்
- தாழி - குடம், வாயகன்ற பாண்டம்
- தாளி - ஒருவகைப் பனை, குழம்பு தாளித்தல்

- வலை - மீன் பிடி வலை
- வழை - ஒருவகை மரம், சுரபுன்னை மரம்
- வளை - பொந்து, வளையல், வளைவு

- வால் - விலங்கின் வால்பகுதி, வெண்மை
- வாழ் - உயிர்வாழ், பிழைத்திரு
- வாள் - வெட்டும் கருவி, ஒளி பொருந்திய

- வாலை - இளம்பெண்
- வாழை - மரவகை
- வாளை - மீன்வகை

## TNPSC Old Questions
## கட்டாயத் தமிழ்

பொருத்தமான பொருளைத் தேர்வு செய்து எழுதுக (CSGS/2023); (CTSE2024)
குளவி, குழவி
அ) வாளைமீன், வாழைமரம்
ஆ) கடலலை, வரவழைத்தல்
**இ) ஒரு வகைப்பூச்சி, குழந்தை**
ஈ) பறவை, கடல்

பொருள் வேறுபாடு அறிக. (CTND003GS/2024)
வெல்லம் - வெள்ளம்
அ) தண்ணீர் - இனிப்பு
ஆ) உணவுப் பொருள் - மழை
**இ) இனிப்பு - ஓடும் நீர்**
ஈ) கசப்பு - பேராறு

பொருள் வேறுபாடு அறிதல் (AOGS/2022), REGS/2022), (PCTS/2024)
விலை - விளை
அ) செய்தல் - வியத்தல்
**ஆ) பொருளின் மதிப்பு - உண்டாக்குதல்**
இ) விரும்புதல் - மெலிந்து போதல்
ஈ) செடியின் இலை - நூல் இழை

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க (DPGS/2022), (IFGS/2023); (PSGS/2022), (PCTS/2024)
அலை - அழை
அ) பரவை - நீர்த்திரை
ஆ) குளிர்ச்சி - மது
**இ) கடலலை - வரவழைத்தல்**
ஈ) மிகுதி - கடல்

பொருள் வேறுபாடு அறிக (AAOGS/2024)
உழை - உளை
அ) சமைத்தல் - பிடரி மயிர்
**ஆ) உழைப்பு - சேறு**
இ) உலைக்களம் - கலைத்தல்
ஈ) உயிர் வாழ்தல் - கவலை

இலை, இளை, இழை - ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக. (EO1GS/2022), (GSTP/2022), (APPGS/2023), (ATOGS/2023)
**அ) செடியின் இலை, மெலிந்து போதல், நூல் இழை**
ஆ) மெலிந்து போதல், செடியின் காம்பு, செடியின் இலை
இ) நூல் இழை, செடியின் இலை, மெலிந்து போதல்
ஈ) மெலிந்து போதல், நூல் இழை, செடியின் இலை

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை கண்டறிக. (AOGS/2022)

| | அலை | அளை |
|---|---|---|
| அ) | கூப்பிடு | தயிர் |
| ஆ) | நத்தை | சேறு |
| இ) | துன்பம் | சோறு |
| ஈ) | கடல் | பாம்புப்புற்று |

'களை' என்னும் சொல்லிற்கு பொருத்தமுடைய இருபொருள்களைக் கண்டறிக. (APPGS/2023)
அ) அழித்தல், ஆக்கல்
ஆ) ஒழித்தல், ஓடுதல்
**இ) வயலில் களை, முகத்தின் ஒளி**
ஈ) வயலில் காளை, எரு

விலை, விளை, விழை போன்ற சொற்களுக்குச் சரியான பொருள் வேறுபாட்டைத் தேர்வு செய்க (AOGS/2022)
அ) உண்டாக்குதல், விரும்பு, பொருளின் மதிப்பு
ஆ) விரும்பு, பொருளின் மதிப்பு, உண்டாக்குதல்
இ) விரும்பு, உண்டாக்குதல், பொருளின் மதிப்பு
**ஈ) பொருளின் மதிப்பு, உண்டாக்குதல், விரும்பு**

வலி, வளி, வழி - ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக (SDGS/2022)
**அ) துன்பம், காற்று, நெறி**
ஆ) காற்று, நெறி, துன்பம்
இ) நெறி, காற்று, துன்பம்
ஈ) துன்பம், நெறி, காற்று

சரியான இணையைக் கண்டறிக : (HOGS/2023)
**அ) அளை - தயிர், பிசை**
ஆ) அளை - பிசை, களை
இ) அளை - அழை, அலை
ஈ) அளை - கூவி, அடை

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிதல் (JADLGS/23)
மன ______ தீர்வாகாது.
அ) உலைச்சல் **ஆ) உளைச்சல்**
இ) உழைச்சல் ஈ) துளைச்சல்

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

ஒலி வேறுபாடறிந்து சரியான விடையைத் தெரிவு செய்க : (CCSE2T/2024)
அ) அளை 1. இளைத்தல்
ஆ) களை 2. நீக்கு
இ) தளை 3. புற்று
ஈ) இளை 4. விலங்கு

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 1 | 4 |
| ஆ) | 4 | 1 | 2 | 3 |
| **இ)** | **3** | **2** | **4** | **1** |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

ஒலி வேறுபாடு அறிந்து பொருத்தமான இணையைத் தேர்க. (CCS3T-2023)

| | அலை | அளை | அழை |
|---|---|---|---|
| அ) | கூப்பிடு | கடல் அலை | புற்று |
| ஆ) | புற்று | கூப்பிடு | கடல் அலை |
| **இ)** | **கடல் அலை** | **புற்று** | **கூப்பிடு** |
| ஈ) | தேடு | நீக்கு | பிழை |

பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க: (G2T-2015)

பட்டியல் ஒன்று

a) வாலை
b) உளை
c) விளை
d) வழை

பட்டியல் இரண்டு

1. தயிர்
2. சுரபுன்னை மரம்
3. இளம்பெண்
4. பிடரிமயிர்

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 1 | 2 | 4 | 3 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

பட்டியல் I ல் உள்ள சொற்களை பட்டியல் II-ல் உள்ள சொற்பொருளறிந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு: (SGTS-2012)

| பட்டியல் I<br>சொல் | பட்டியல் II<br>பொருள் |
|---|---|
| a) கலம் | 1. காற்று |
| b) களம் | 2. வலிமை |
| c) வலி | 3. கப்பல் |
| d) வளி | 4. இடம். |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 2 | 4 |
| ஆ) | 4 | 2 | 3 | 1 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 1 | 4 | 2 | 3 |

## னகர, ணகர வேறுபாடு

- ஊண் - உணவு
- ஊன் - இறைச்சி

- திணை - நிலம், ஒழுக்கம்
- தினை - தானிய வகை

- அண்ணம் - மேல்வாய்
- அன்னம் - ஒரு பறவை

- மணம் - நறுமணம், திருமணம்
- மனம் - உள்ளம்

- பனி - பனிக்காலம் / குளிர்ச்சி
- பணி - வேலை

- ஆணி - இரும்பால் ஆன ஆணி, எழுத்தாணி
- ஆனி - தமிழ்மாதம், ஒரு மாதம்

- வண்மை - கொடை
- வன்மை - வலிமை

- வாணம் - வெடி
- வானம் - ஆகாயம்

- ஆணை - கட்டளை
- ஆனை - யானை

- கணை - அம்பு
- கனை - கனைத்தல்

- கான் - காடு
- காண் - பார்

- திண்மை - வலிமை
- தின்மை - தீமை

- அணல் - தாடி
- அனல் - நெருப்பு

- கணம் - கூட்டம், நேரம்
- கனம் - பாரம், பளு, சுமை

- பேண் - காப்பாற்று
- பேன் - தலையில் வாழும் பேன்

- மணை - உட்காரும் பலகை
- மனை - வீடு

- மாண் - பெருமை
- மான் - புள்ளிமான்

- அரண் - மதில், பாதுகாப்பு, கோட்டை
- அரன் - சிவன்

- அண்ணம் - மேல்வாய்
- அன்னம் - ஒரு பறவை

- உண்ணு - சாப்பிடு
- உன்னு - நினைத்துப்பார்

- எண்ண - நினைக்க, எண்ணிப்பார்க்க
- என்ன - கேள்வி

- காண் - பார்
- கான் - காடு

- தணி - அடங்கு
- தனி - தனித்திருத்தல்

- துணி - சீலை
- துனி - துன்பம், கோபம், அச்சம்

- நாண் - கயிறு, நாணம்
- நான் - தன்னைக் குறிப்பது, தன்மை இடப்பெயர்

- வண்மை - வளம், வழங்குதல்
- வன்மை - வலிமை

### TNPSC Old Questions
### கட்டாயத் தமிழ்

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு (PCTS/2024)

ஆணி - ஆனி

அ) எழுத்தாணி - மாதம் ஆ) இரும்பாணி - வருடம்
இ) எழுத்தாணி - காலம் ஈ) இரும்பாணி - நாள்

வாணம், வானம் ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக. (CYCS/2022), (CASEGS/2024)

அ) வெடி, ஆகாயம் ஆ) ஆகாயம், புல்
இ) புல், ஆகாயம் ஈ) ஆகாயம், வெடி

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து பிழையற்ற தொடரைக் கண்டறிக. (AAOGS/2024)

அ) கண்ணன் திருமண விட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் வாழ்த்தினான். மணமக்களை
ஆ) கண்ணன் திருமண விட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் மனமக்களை வாழ்த்தினான்.
இ) கண்ணன் திருமன விட்டிற்குச் சென்று மனமகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்தினான்.
ஈ) கண்ணன் திருமண விட்டிற்குச் சென்று மணமகிழ்ச்சியுடன் மணமக்களை வாழ்த்தினான்.

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு. (MIGS/2023)
இராமன் __________ எய்தான்.

அ) கணை ஆ) கனை
இ) கநை ஈ) களை

ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக. (DPGS/2022)

| | | |
|---|---|---|
| திணை | - | தினை |
| அ) உயர்திணை | - | ஊர் |
| ஆ) திண்ணுதல் | - | வாக்கியம் |
| இ) ஒழுக்கம் | - | தானியம் |
| ஈ) திண்ணை | - | துணிவு |

"தினை - திணை" - இச்சொற்களின் பொருளைத் தரும் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க. (SFGS/2023)

| | | |
|---|---|---|
| அ) உணவுப் பொருள் | - | ஒழுக்கம் |
| ஆ) குறிஞ்சி | - | அகப்பொருள் |
| இ) வயல் | - | மருதம் |
| ஈ) ஒழுக்கம் | - | புறப்பொருள் |

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைக் கண்டறிக. (IFGS/2023), (AOGS/2023)

| | | |
|---|---|---|
| மனம் | | மணம் |
| அ) வாசனை | - | உள்ளம் |
| ஆ) உள்ளம் | - | வாசனை |
| இ) திருமணம் | - | நெஞ்சம் |
| ஈ) அழகு | - | மணத்தல் |

பொருள் வேறுபாடறிந்து பொருளைத் தேர்வு செய்க. (IFGS/2023), (RAMGS/2023)
பனி - பணி

அ) குளிர்ச்சி, வேலை ஆ) வேலை, குளிர்ச்சி
இ) பாறை, பாம்பு ஈ) குளிர்ச்சி, வெப்பம்

ஒலி வேறுபாடறிந்து சரியான தொடரை எழுது (SFGS/2023)

அ) வானில் வாணம் வெடித்தது
ஆ) வாணில் வானம் வெடித்தது
இ) வாணில் வாணம் வெடித்தது
ஈ) வானில் வானம் வெடித்தது

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க :

| | | |
|---|---|---|
| வானம் | - | வாணம் |
| அ) ஆகாயம் | - | வெட்டவெளி |
| ஆ) பட்டாசு | - | ஆகாயம் |
| இ) வெடி | - | ஆகாயம் |
| ஈ) ஆகாயம் | - | வெடி |

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தெரிவு செய்க. (IFGS/2023)
ஊண் - ஊன்

| | | |
|---|---|---|
| அ) மாமிசம் | - | சாப்பிடு |
| ஆ) உணவு | - | ஊட்டச்சத்து |
| இ) உணவு | - | புலால் |
| ஈ) புரதம் | - | உண்டி |

ஒலி வேறுபாடறிந்து சரியான தொடரைக் கண்டறிக : (VSGS/2023)

அ) தோட்டத்தில் மலர்கள் மனம் வீசியதால் மணம் மகிழ்ந்தது
ஆ) தோட்டத்தில் மலர்கள் மனம் வீசியதால் மனம் மகிழ்ந்தது
இ) தோட்டத்தில் மலர்கள் மணம் வீசியதால் மனம் மகிழ்ந்தது
ஈ) தோட்டத்தில் மலர்கள் மணம் வீசியதால் மணம் மகிழ்ந்தது

## ரகர, றகர வேறுபாடு

- கரை - எல்லை, தடுப்பு, ஓரம்
- கறை - மாசு

- பரவை - கடல்
- பறவை - பறப்பனவாகிய உயிரினம்; புள்

- மரை - மான்; தாமரை
- மறை - வேதம்

- அரை - பாதி
- அறை - கட்டடப் பகுதி

- உரை - சொல்
- உறை - தலையணை உறை

- கூரிய - கூர்மையான
- கூறிய - சொன்ன

- இரங்கு - கருணை
- இறங்கு - சரிவு

- எரி - தீ
- எறி - வீசு

- இரை - ஒலி, உணவு
- இறை - கடவுள், மன்னன்

இரைச்சல்

- நிறை - அளவு, சால்பு
- நிரை - ஒழுங்கு, பசு

- பொறுத்தல் - பொறுத்துக் கொள்ளுதல் / தாங்குதல்
- பொருத்தல் - பொருந்தச் செய்தல்

- இரத்தல் - பிச்சையெடுத்தல்
- இறத்தல் - சாதல்

- ஏரி - நீர்நிலை
- ஏறி - மேலே ஏறி

- கூரை - வீட்டின் கூரை
- கூறை - புடவை

- அரம் - ஒரு கருவி
- அறம் - நீதி

- குறை - குறைவு, குறைபாடு, குறைதல்
- குரை - குரைத்தல் (ஒலி)

- பொறி - தீப்பொறி
- பொரி - நெல்பொரி

- அரி - திருமால், சிங்கம், காய்களை அரி
- அறி - அறிந்து கொள்

- பரி - குதிரை
- பறி - பறித்தல்

- அலரி - அலரிப்பூ
- அலறி - அழுது

- உரவு - வலிமை
- உறவு - சுற்றம்

- கரி - யானை
- கறி - காய்கறி, மிளகு

- குரங்கு - வானரம்
- குறங்கு - தொடை

- சீரிய - சிறந்த
- சீறிய - சினந்த

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க. (ATOGS/2023), (BEGS/2023), (AAOGS/2024)
பரவை -பறவை
அ) பறப்பவை - ஆழி　　ஆ) கடல் - புள்
இ) முந்நீர் - முகில்　　ஈ) குளவி - குழலி

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (HSGS/2024)
பழந்தமிழர்கள் _________ வழியாக போர் செய்யும் _______ போன்ற கூர்ந்த மதியுடையவர்கள்
அ) வீரம், அரம்　　ஆ) அரம், அறம்
இ) அறம், அரம்　　ஈ) அகம், புறம்

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளை கண்டறிக. (PSGS/2022)
கரை　　கறை
அ) கரைதல் - அறை
ஆ) ஓரம் - அழுக்கு
இ) புரை - பறை
ஈ) முதலை - முதல்

ஒலி வேறுபாடறிந்து சரியான இணையைத் தேர்வு செய்: (FAGS/2022)
மரை - மறை
அ) மறைதல் - மறைத்தல்
ஆ) தாமரை - மறைத்தல்
இ) தாமரை - மறத்தல்
ஈ) ஆணி - மறைதல்

பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் (AOGS/2023)
சரியான இணையைத் தேர்ந்தெடு
அ) கறை - அழுக்கு　　ஆ) பணி - குளிர்
இ) அலை - கூடு　　ஈ) தாள் - உயர்

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்: (FAGS/2022), (SFGS/2023), (RAMGS/2023)
ஏரி - ஏறி
அ) ஆறு - ஆற்றுப்படுத்தல்
ஆ) ஆறு - குளம்
இ) ஏறுதல் - எறிதல்
ஈ) நீர்நிலை - மேலே சென்று

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க : (LEGS/2023), (RAMGS/2023), (VCGS/2022), (REGS/2022), (MIGS/2023)
கூரை- கூறை
அ) வீட்டின் கூரை - விரும்பு
ஆ) வீட்டின் கூரை - புடவை
இ) வீட்டின் மேல் - நண்டு
ஈ) வீட்டின் மேல் - மதிப்பு

சரியான இணையைத் தேர்ந்தெடு. (CSGS/2023)
குரை - குறை
அ) நாயின் குரைப்பொலி - அளவைக் குறைத்தல்
ஆ) அளவைக் குறைத்தல் - நாயின் குரைப்பொலி
இ) வீட்டின் மேல் பகுதி - அளவைக் குறைத்தல்
ஈ) அளவைக் குறைத்தல் - வீட்டின் மேல்பகுதி

குரங்கு - குறங்கு - ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிக. (LEGS/2023)
அ) வானரம் - வளைவு
ஆ) வானரம் - தொடை
இ) விலங்கு - வானரம்
ஈ) விலங்கு - வளைவு

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க. (SGTS-2012)
கரை　　கறை
அ) காகம் - தாளம்
ஆ) கூவு - மேளம்
இ) ஓரம் - அழுக்கு
ஈ) குயில் - களங்கம்.

ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க. (SGTS-2012)

| | எரி | | எறி |
|---|---|---|---|
| அ) | மீ | - | மாசு |
| ஆ) | ஈ | - | காசு |
| இ) | தீ | - | வீசு |
| ஈ) | வீ | - | ஏசு. |

## ந, ன வேறுபாடு

- முந்நாள் - மூன்று நாள்
- முன்னாள் - முந்தைய நாள்

- தேநீர் - தேயிலை நீர்
- தேனீர் - தேன்போலும் இனிய நீர்

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பொருந்தா இணையைக் கண்டறிக. (EOGT-2013)

| | | | |
|---|---|---|---|
| அ) | கலி | - | சனி |
| ஆ) | திணை | - | ஒழுக்கம் |
| இ) | கணை | - | அம்பு |
| ஈ) | முன்னாள் | - | மூன்று நாள் |

## புத்தகப் பயிற்சி வினா - விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6n

1. சிரம் என்பது ________ (தலை / தளை)
   விடை : தலை

2. இலைக்கு வேறு பெயர் ______ (தளை / தழை)
   விடை : தழை

3. வண்டி இழுப்பது ________ (காலை / காளை)
   விடை : காளை

4. கடலுக்கு வேறு பெயர் ______ (பரவை / பறவை)
   விடை : பரவை

5. பறவை வானில் ________ (பறந்தது / பரந்தது)
   விடை : பறந்தது

6. கதவை மெல்லத் ________ (திறந்தான் திரந்தான்)
   விடை : திறந்தான்

7. பூ ___________ வீசும் (மனம் / மணம்)
   விடை : மணம்

8. புலியின் _______ சிவந்து காணப்படும் (கன் /கண்)
   விடை : கண்

9. குழந்தைகள் ________ விளையாடினர். (பந்து / பன்து)
   விடை : பந்து

10. வீட்டு வாசலில் _______ போட்டனர். (கோலம் கோளம்)
    விடை : கோலம்

***

**தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழையைத் திருத்தி எழுதுக.**

1. எண் விட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
2. தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்.
3. வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.

விடை :

1. என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.
2. தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்.
3. வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது.

***

**பொருள் வேறுபாடறிந்து எழுதுக.**

1. போரில் பயன்படுத்தியது **வாள்**
2. பூனைக்கு உள்ளது **வால்**
3. வாசலில் போடுவது **கோலம்**
4. பந்தின் வடிவம் **கோளம்**

***

**பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
6n

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் _______ என்று பெயர். (பறவை / பரவை)
2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக _______ ஆற்றினார். (உரை / உறை)
3. முத்து தம் _________ காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)
4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை _________ (அலைத்தாள் / அழைத்தாள்).

விடை :

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் **பரவை** என்று பெயர்.
2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக **உரை** ஆற்றினார்.
3. முத்து தம் **பணி** காரணமாக ஊருக்குச் சென்றார்.
4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை **அழைத்தாள்.**

***

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| தெண்றல் | - | தென்றல் |
| கன்டம் | - | கண்டம் |
| நன்ரி | - | நன்றி |
| மன்டபம் | - | மண்டபம் |

***

**பிழை திருத்தம் செய்க.**

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்

ஓதி யுனர்ந்தின் புருவோமே"
கவிமணி தேசிக விநாயகனார்

திருத்தம் :

"தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே"
கவிமணி தேசிக விநாயகனார்

***

## பிழை திருத்துக.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

திருத்தம் :

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

***

## பிழை நீக்குக.

பெறுந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிரைவு செய்யவிள்ளை என்றாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடையு துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

விடை :

பெருந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிறைவு செய்யவில்லை என்றாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அளவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்களை நாள்தோறும் படித்தது. எப்போது அறையை விட்டு வெளியே போனாலும் மின்விசிறியை நிறுத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமணிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

***

உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடரை நிரப்புக.

1. மல்லிகை ______ வீசியது. (மனம், மணம்)
2. பூமியை ______ வருவேன். (வளம், வலம்)
3. ______ பதுங்கிப் பாயும். (புலி, புளி)
4. முகத்தில் ______ முறுவல் வேண்டும். (புண், புன்)
5. நாய் ______ நிமிராது. (வால், வாள்)

விடை :

1. மல்லிகை **மணம்** வீசியது.
2. பூமியை **வலம்** வருவேன்.
3. புலி பதுங்கிப் பாயும்.
4. முகத்தில் **புன்** முறுவல் வேண்டும்.
5. நாய் **வால்** நிமிராது.

***

**மயங்கொலிப் பிழைகளைத் திருத்துக.**

1. இரு சக்கர வண்டிகள் பலுது பார்க்கப்படும்.
2. நால்தோறும் பகல் காட்சி உண்டு.
3. வறந்தரு விநாயகர் கோயில்.

விடை :

1. இரு சக்கர வண்டிகள் பழுது பார்க்கப்படும்.
2. நாள்தோறும் பகல் காட்சி உண்டு.
3. வரந்தரு விநாயகர் கோயில்.

***

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

உலை, உளை, உழை
மனஉளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க
வேண்டும்.

வலி, வளி, வழி
கடற்கரைவழி நடக்கையில் ஈரவளி வீச மனவலி கொஞ்சம்
குறைந்தது.
(வலி - வேதனை, வளி - காற்று, வழி - பாதை)

கலை, களை, கழை
களையான அவள் கழையில் ஆடியது கலையாக இருந்தது.
(கலை - வித்தை; களை - பொலிவு; கழை - மூங்கில்)

கனை, கணை
கணைப்பட்ட காயத்தால் குதிரை கனைத்தது.
(கணை - அம்பு; கனை - கனைத்தல்)

குரை, குறை
நாயின் குரைத்தல் சத்தம் மெல்ல குறைந்தது.
(குரை - குரைத்தல் ஒலி; குறை - குறைதல் )

பொரி, பொறி
தீப்பொறி பட்டு பொரி கருகியது.
(பொறி - தீப்பொறி; பொரி - நெல்பொரி)

***

**பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

எ.கா. களம், கலம்.
போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில்நீர் தரப்பட்டது.

வலம், வளம்.
விடை : ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

புல் - புள்
விடை : அடிப்பட்ட புள் ஒன்று புல் தரையில் விழுந்தது.
(புள் - பறவை)

உழை - உளை
விடை : உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை என்றால் மன உளைச்சல் தான்.

கான் - காண்
விடை : மரங்களை வெட்டியதால் சுருங்கியுள்ள கானைக் காண்.
(கான் - காடு, காண் - பார்)

ஊண் - ஊன்
விடை : ஊணில் ஊனைத் தவிர்க்க வேண்டும் என்றார் வள்ளலார்.
(ஊண் - உணவு, ஊன் - இறைச்சி)

தின்மை - திண்மை
விடை : தின்மை செய்வது ஒருவர்க்கு திண்மையாக அமையாது.
(திண்மை - வலிமை, தின்மை - தீமை)

...

**பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
விடை : இ)
...

**பொருள் வேறுபாடு உணர்ந்து வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.**

**அரி - அறி**
காக்கும் கடவுள் அரி (திருமால்); என்பதை நன்றாய் அறி (நினை).

**பனி - பணி**
பனியில் (பனிக்காலம்) நனைந்து பணி (வேலை) செய்தால் பிணி வரும்.

**களி - கலி**
நளனைப் பிடித்திருந்த கலி நீங்கியது (சனி)
நளனும் களிப்படைந்தான் (மகிழ்வு)

**விலை - விளை**
விளைச்சல் மிகுந்ததால் விலை குறைந்தது.

**ஒலி - ஒளி**
செவியால் கேட்கும் ஒலியும் நன்று கண்ணால் பார்க்கும் ஒளியும் நன்று.

**விளி - விழி**
விளிப்பு ஒலி கேட்டேன் (அழைப்பு) விழிகளைத் திறந்தேன் (கண்விழி)

**ஒரு - ஒறு**
ஒரு ரூபாய் ஒறுப்புக் கட்டணம் (தண்டனை)

**மனம் - மணம்**
மலரின் மணத்தில் மனத்தைப் பறிகொடுத்தேன்.

**மரம் - மறம்**
மனிதர்க்கு உரியது மறம் (வீரம்) அன்றேல் அவர் மரம்!

**ஊன் - ஊண்**
ஊண் உயிரிகளின் உணவு; ஊன் உயிரிகளின் உடல் பகுதி.

**கல் - கள்**
மலையில் இருப்பது கல்; பனையில் இருப்பது கள்.

**பரவை - பறவை**
பரந்து இருப்பதால் கடலைப் பரவை என்றனர்;
பறந்து வருவதால் புள் இனத்தைப் பறவை என்றனர்.

**இரத்தல் - இறத்தல்**
பண்டைய புலவோர்
இரத்தலினும் இறத்தல் (உயிர்விடுதல்)
நன்றென வாழ்ந்தனர்

**பரி - பறி**
அக்காலக் கள்வர்கள் பரி (குதிரையில்) வந்து, (வழிப்பறி) பறித்தல் செய்தனர்.

**கரி - கறி**
கரி அடுப்பில் கறி சமைப்போரும் உண்டு.

...

**உரிய விடையைத் தெரிவுசெய்தல்.**

1. உயர்ந்து நிற்பது ________. (மலை, மழை)
2. வானத்தில் இருந்து பெய்வது ________. (மலை, மழை)
3. உழவர்கள் ஆடித்திங்களில் ________ பூட்டுவர். (பொண்ணேர், பொன்னேர்)
4. மழைநீரை ________ என்பர். (வானப்புனல், வாணப்புனல்)
5. பாரதிதாசன் இயற்றிய நூல் ________. (பாண்டியன் பரிசு, பான்டியன் பரிசு)

விடை :
1. உயர்ந்து நிற்பது **மலை**.
2. வானத்தில் இருந்து பெய்வது **மழை**.
3. உழவர்கள் ஆடித்திங்களில் **பொன்னேர்** பூட்டுவர்.
4. மழைநீரை **வானப்புனல்** என்பர்.
5. பாரதிதாசன் இயற்றிய நூல் **பாண்டியன் பரிசு**.

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(CTND003GS/2024)
பூ ________ வீசும்.
அ) மணம் ஆ) மனம்
இ) மன்னம் ஈ) மனனம்
உ) விடை தெரியவில்லை

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(HSGS/2024)
இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக ________ ஆற்றினார். (உரை / உறை)
அ) பேசி ஆ) உறை
இ) உரை ஈ) கலந்துரையாடல்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
இலைக்கு வேறு பெயர் ________ (AOGS/2023)
அ) தளை ஆ) தழை
இ) களை ஈ) தலை

வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது
பிழைத்திருத்துக. (BEGS/2023), (MIGS/2023)
அ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது
**ஆ) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது**
இ) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நள்ளது
ஈ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது

பிழையற்ற சரியான தொடரைக் கண்டறிக. (PSGS/2022)
அ) எண் விட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
ஆ) தேர்த்திருவிலாவிற்குச் சென்றனர்.
**இ) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது.**
ஈ) இளைக்கு வேறு பெயர் தளை.

பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் __________ என்று பெயர். (GSTP/2022)
அ) பறவை ஆ) பரதை
**இ) பரவை** ஈ) பறப்பு

பிழையற்றத் தொடரைக் கண்டறிக. (FAGS/2022)
அ) தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்
ஆ) தேர்த் திருவிலாவிற்குச் சென்றணர்
**இ) தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்**
ஈ) தேர்த் திருவிழாவிற்குச் சென்றணர்

பொருள் வேறுபாடறிந்து சரியானவற்றைத் தேர்க. (FAGS/2022)
போரில் பயன்படுத்தியது ________, பூனைக்கு உள்ளது __________
அ) வாழ், தாழ் ஆ) கால், காளை
**இ) வாள், வால்** ஈ) மனம், மணம்

பொருள் வேறுபாடறிந்து எழுதுக. (GSTP/2022)
போரில் பயன்படுத்தியது. __________
அ) வால் ஆ) வாழ்
இ) வாள் ஈ) வான்

பொருள் வேறுபாடறிந்து சரியானவற்றைத் தேர்க (REGS/2022)
வாசலில் போடுவது __________, பந்தின் வடிவம் __________
**அ) கோலம், கோளம்** ஆ) கோளம், கோடு
இ) பூ, வட்டம் ஈ) கோல், கோள்

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு. (CTSE2024)
தோட்டத்தில் மேயுது__________ பசு.
அ) வெள்லை **ஆ) வெள்ளை**
இ) வெல்லை ஈ) வெல்ளை

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு. (CTSE2024)
வீட்டுக்கு __________ அடித்தான்.
**அ) வெள்ளை** ஆ) வெல்ளை
இ) வெல்லை ஈ) வெள்லை

ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொற்றொடரைத் தெரிவு செய்க. (CEGS/2024)
அ) மணிமேகலை மணி பள்ளவத் தீவிற்குச் சென்றால்
**ஆ) மணிமேகலை மணி பல்லவத் தீவிற்குச் சென்றாள்**
இ) மணி மேகளை மணி பள்ளவத் தீவிற்குச் சென்றாள்
ஈ) மணிமேகலை மனிபல்லவத் தீவிற்குச் சென்றாள்

# வெளிவிவரம்

## லகர, ளகர, ழகர வேறுபாடு

- அல் - இரவு
- அள் - அள்ளி எடு.

- அளி - வண்டு, அருள், கா
- அழி - கெடு

- அளகு - பெண் பறவை, கோழி
- அழகு - அலங்காரம்

- அளை - துழாவு, தயிர், குகை
- அழை - கூப்பிடு, பெயரிடு

- ஆளி - அரசன், ஆள்வோன், சிங்கம்
- ஆழி - கடல், சக்கரம், மோதிரம்

- ஆள் - புழங்கு, அரசுசெய், ஆண்மகன், ஊழியன்
- ஆழ் - அமுக்கு, தாழ்த்து

- ஆள்வார் - ஆளுவோர்
- ஆழ்வார் - திருமால் அடியவர்

- அவல் - பள்ளம்
- அவள் - பெண் (சேய்மைச்சுட்டு)

- அல்லல் - துன்பம்
- அள்ளல் - வாரி எடுத்தல்

- அலத்தல் - அலட்டல்
- அளத்தல் - அளவிடுதல்

- அலம் - கலப்பை
- அளம் - உப்பளம்

- அலகை - கற்றாழை
- அளகை - பெண்

- அலகம் - திப்பிலி
- அளகம் - வெள்ளெருக்கு, நீர்

- இளை - மெலிதல், களைத்தல்
- இழை - தேய், செய், நூல்

- உளவு - வேவு, மறைவு, ஒற்று
- உலவு - நட
- உழவு - பயிர்த்தொழில், வருத்தம், முயற்சி

- உழுவை - புலி

- உளுவை - மீன்வகை

- உழு - நிலத்தை உழு
- உளு - உளுத்துப் போதல்
- உலு - தானியப் பதர்

- உழி - இடம், பொழுது, ஏழாம் வேற்றுமை உருபு
- உளி - தச்சுக் கருவிகளுள் ஒன்று

- உளை - நோகு, சேறு, பிடரிமயிர்
- உழை - வருந்தி வேலைசெய், மான், பக்கம்

- எல் - கல், மாலை, சூரியன்
- எள் - எண்ணெய் வித்து

- எலு - கரடி
- எழு - எழுந்திரு, தூண்

- ஒளி - மறை, வேதம், வெளிச்சம், புகழ்
- ஒழி - அழி, நீக்கு

- கல் - மலை, பாறை
- கள் - மது, தேன்

- கலி - பாவகை, சனி
- கழி - கோல், மிகுதி
- களி - மகிழ்வு, இன்பம்

- கலகம் - போர்
- கழகம் - சங்கம், கூட்டமைப்பு

- காளி - துர்க்கை
- காழி - சீகாழி

- காலம் - பொழுது, நேரம்
- காளம் - எட்டிமரம், சூலம்

- காலை - பொழுது
- காளை - காளைமாடு, இளைஞன்

- கிழவி - முதியவள், உரியவள்
- கிளவி - சொல்

- கீள் - தோண்டு
- கீழ் - கீழே, தாழ்வு

- குவலை - துளசி
- குவளை - குவளை மலர்

- குலம் - இனம், குடி
- குளம் - நீர்நிலை, தடாகம்

- குலி - மனைவி
- குளி - நீராடு, முழுகு
- குழி - பள்ளம், கிடங்கு

- குளம்பு - விலங்கின் அடி
- குழம்பு - சேறு, காய்கறிக் குழம்பு

- குலை - கொத்து

- குழை - குண்டலம், தளிர்

- கூலி - ஊதியம்
- கூளி - பேய்
- கூழி - குள்ளப்பசு

- கூலம் - தானியம்
- கூளம் - குப்பை, வைக்கோல் கூளம்
- கூழம் - எள்

- கேள் - செவிகொடு, நட்பு
- கேழ் - பொருந்து, நிறம், ஒளி

- கொல்லை - புழக்கடை, தரிசுநிலம்
- கொள்ளை - திருடுதல், மிகுதி

- கொல்லாமை - கொலை செய்யாமை
- கொள்ளாமை - ஏற்றுக்கொள்ளாமை, அடங்காமை

- கொலை - கொல்லுதல்
- கொளை - கோட்பாடு

- கொலு - அரசசபை
- கொளு - பொருந்து
- கொழு - மழு, கொழுப்பாகு

- கொல்லி - உயிர்க்கொல்லி, ஒரு மலை
- கொள்ளி - கொள்ளிக்கட்டை

- கொளுந்து - எரி
- கொழுந்து - இளஇலை, மருக்கொழுந்து

- கோலை - மிளகு
- கோளை - குவளை, எலி
- கோழை - விரமற்றவன்

- கோலம் - அழகு, அலங்காரம்
- கோளம் - உருண்டை, வட்டம்

- கோளி - கொள்பவள், ஆல்
- கோழி - ஒரு பறவை

- சலம் - நீர்
- சளம் - பொய், துன்பம்

- சாளை - கடல்மீன்
- சாலை - பாடசாலை
- சாழை - குடிசை

- சுளி - முகங்கோணு, கோபி
- சுழி - வளை, வட்டமிடு, நீர்ச்சுழி

- சூல் - கர்ப்பம்
- சூழ் - சூழ்ந்துகொள், சுற்று
- சூள் - சபதம், ஆணை

- சூலை - வயிற்றுநோய்
- சூளை - செங்கல் சூளை

- சோளம் - ஒரு தானியம்

- சோழம் - ஒரு நாடு

- தளை - கட்டு, விலங்கு
- தழை - இலை, தழைத்தோங்கு

- தவளை - ஓர் உயிரி
- தவலை - பாத்திரம்

- தாலம் - உலகம், தேன்
- தாளம் - இசைக்கருவி
- தாழம் - தாழ்வு

- தாலி - மங்கலநாண்
- தாழி - கடல், குடல், பெரும்பானை
- தாளி - தாளித்தல், பனை

- தாள் - கால், முயற்சி, அடித்தண்டு
- தாழ் - கீழாகு, கதவடைக்கோல், பணி

- துலை - ஒப்பு, கனம், தராசு
- துளை - துவாரம், வாயில்

- துலி - பெண் ஆமை
- துளி - மழைத்துளி, திவலை, சிறிய அளவு
- துழி - பள்ளம்

- துலக்கம் - ஒளி, தெளிவு
- துளக்கம் - அசைவு, வருத்தம்

- தூலி - எழுதுகோல்,
- தூளி - புழுதி, குதிரை

- தெளி - தெளிவாகு, சிதறு
- தெழி - அதட்டு, வருத்து

- தோல் - சருமம், வனப்பு
- தோள் - புயம், வீரம்

- தோளன் - தோளையுடையவன்
- தோழன் - நண்பன்

- நலிதல் - நலிந்துபோதல்
- நளிதல் - செறிதல்

- நலி - நோய்
- நளி - குளிர்ச்சி, பெருமை

- நாழ் - குற்றம், செருக்கு
- நாள் - காலம்

- நாளி - மூங்கில், நாய்
- நாழி - படி, நாழிகை

- நாலிகை - மூங்கில்
- நாழிகை - வட்டம், கடிகாரம்

- நீலம் - ஒரு நிறம்
- நீளம் - நெடுமை, தாமதம்

- பலி - பலியிடுதல்

- பழி - குற்றம்

- பளு - கனம்
- பழு - முதிர், கனி

- பீழை - துன்பம், புழுங்குதல்
- பீளை - அழுக்கு

- புகல் - அடைக்கலம்
- புகழ் - பெருமை

- புளுகு - பொய்
- புழுகு - பூனை

- பூளை - இலவம்பஞ்சு
- பூழை - துவாரம், சிறுவாசல்

- பொளி - கொத்து, சுத்தியாலடி
- பொழி - ஊற்று, சொரி

- பொலிதல் - செழித்தல்
- பொழிதல் - ஈதல்

- போலி - பொய்
- போளி - இனிப்புப் பண்டம்

- முளவு - முள்ளம்பன்றி
- முழவு - மத்தளம்

- முளை - தோன்று, விதைமுளை
- முழை - குகை

- மூளை - மண்டை உள்ளீடு
- மூழை - அகப்பை, துடுப்பு

- மூள் - மிகு
- மூழ் - அமிழ்ந்துபோதல்

- வலை - மீன் முதலியன் பிடிக்கும் ஒரு கருவி
- வழை - புதுமை, இளமை, சுரபுன்னை மரம்
- வளை - எலி வளை, கை வளையல், வட்டமாக்கு, துவாரம்

- வளி - காற்று
- வழி - பாதை, நிரம்பிவிழு

- வலு - வலிமை
- வழு - குற்றம்

- வாளி - அம்பு, வளையம்
- வாழி - வாழ்க

- விலங்கு - பூட்டு
- விளங்கு - திகழ்தல்

- விலக்கு - விலக்கு விடு
- விளக்கு - தீபம்

- விளா - ஒரு மரம்
- விழா - திருவிழா, கொண்டாட்டம்

- விழி - கண்திற, பார்
- விளி - கூப்பிடு, இற

- விளை - வளர், முதிர், உண்டுபண்ணு
- விழை - விரும்பு

- வேலை - பணி
- வேளை - பொழுது

- வேலம் - வேலமரம்
- வேழம் - யானை, கரும்பு, மூங்கில்
- வேளம் - சிறைக்களம்

- வேல் - வேலாயுதம்
- வேள் - வேளிர் குலத்தவர், ஆசை

**னகர, ணகர வேறுபாடு**

- அண்மை - அருகில்
- அன்மை - தீமை

- அணுக்கம் - அண்டை
- அனுக்கம் - வருத்தம்

- அணி - நெருப்பு
- அனி - நெற்பொறி

- அணு - நுண்மை
- அனு - தாடை, அற்பம்

- ஆணம் - பற்றுக்கோடு
- ஆனம் - தெப்பம்

- உண்ணல் - உண்ணுதல்
- உன்னல் - நினைத்தல்

- ஏணை - தொட்டில்
- ஏனை - மற்றது

- எண்கு - கரடி
- என்கு - என்று சொல்லுதல்

- ஐவணம் - ஐந்து வண்ணம்
- ஐவனம் - மலை நெல்

- கண்ணல் - கருதல்
- கன்னல் - கரும்பு, கற்கண்டு

- கண்று - அம்பு
- கன்று - இளமரம், குட்டி

- கண்ணி - மாலை, கயிறு
- கன்னி - குமரிப்பெண்

- கணம் - கூட்டம்
- கனம் - பாரம்

- கணகம் - ஒரு படைப்பிரிவு
- கனகம் - பொன்

- காணல் - பார்த்தல்
- கானல் - பொய் தோற்றம்

- காணம் - பொன், கொள்
- கானம் - காடு, இசை

- கிண்ணம் - வட்டில், சிறு பாத்திரம்
- கின்னம் - கிளை, துன்பம்

- குணிப்பு - அளவு, ஆராய்ச்சி
- குனிப்பு - வளைப்பு, ஆடல்

- குணித்தல் - மதித்தல்
- குனித்தல் - வளைதல்

- குணி - வில், ஊமை
- குனி - குனிதல், வளை

- கோண் - கோணல், மாறுபாடு
- கோன் - அரசன்

- கேணம் - செழிப்பு
- கேனம் - பித்து

- சாணம் - சாணைக்கல், சாணம்
- சானம் - அம்மி, பெருங்காயம்

- சுணை - கூர்மை
- சுனை - நீரூற்று

- சுண்ணம் - வாசனைப்பொடி
- சுன்னம் - சுண்ணாம்பு

- சேணம் - மெத்தை
- சேனம் - பருந்து

- சேணை - அறிவு
- சேனை - படை

- சோனை - மழைச்சாரல், மேகம்
- சோணை - ஒரு நதி, சேரனின் மனைவி

- தணி - தணித்தல்
- தனி - தனிமை

- திண் - வலிமை
- தின் - உண்

- நண்பகல் - நடுப்பகல்
- நன்பகல் - நல்லபகல்

- நாணம் - வெட்கம்
- நானம் - கவரிமான்

- பணை - முரசு
- பனை - ஒருவகை மரம்

- பட்டணம் - நகரம்
- பட்டனம் - கடற்கரை நகரம்

- புணை - தெப்பம்
- புனை - கற்பனை

- முணை - வெறுப்பு, மிகுதி
- முனை - முன்பகுதி, துணிவு, முதன்மை

- வண்ணம் - நிறம், குணம், அழகு
- வன்னம் - எழுத்து, நிறம்

## ரகர, றகர வேறுபாடு

- அர - பாம்பு
- அற - தெளிய, நீங்க, மிக

- அரவு - பாம்பு
- அறவு - அறுதல், தொலைதல்

- அருகு - புல்வகை
- அறுகு - குறைந்து போதல்

- அக்கரை - அந்தக் கரை
- அக்கறை - ஈடுபாடு

- அரைதல் - தேய்தல்
- அறைதல் - அடித்தல், சொல்லுதல்

- அப்புரம் - அந்தப் பக்கம்
- அப்புறம் - பிறகு

- ஆர - நிறைய
- ஆற - சூடு குறைய

- ஆரல் - ஒருவகை மீன்
- ஆறல் - சூடு குறைதல்

- இரக்கம் - கருணை
- இறக்கம் - சரிவு

- இரைத்தல் - ஒலித்தல்
- இறைத்தல் - சிதறுதல்

- இருத்தல் - அமர்ந்திருத்தல்
- இறுத்தல் - வடித்தல்

- இரவு - இரவு நேரம், யாசித்தல்
- இறவு - மிகுதி, முடிவு, நீக்கம்

- உரைப்பு - தங்குதல்
- உறைப்பு - கொடுமை, காரம்

- உருக்குதல் - இளக்குதல்
- உறுக்குதல் - சினத்தல்

- உரு - வடிவம்
- உறு - மிகுதி

- உரவோர் - அறிஞர்
- உறவோர் - சுற்றத்தார்

- உரை - சொல்
- உறை - தலையணை உறை

- கரவு - பொய்
- கறவு - கப்பம்

- கரத்தல் - மறைத்தல்
- கறத்தல் - கவர்தல்

- கரி - யானை, கருமை, இறைச்சி
- கறி - காய்கறி, மிளகு

- காரை - ஒரு வகை செடி, ஒரு வகை மீன்
- காறை - ஒரு கழுத்தணி

- கீரி - ஓர் உயிரினம்
- கீறி - பிளந்து, அரிந்து

- கூரல் - ஒரு மீன், பறவை இறகு
- கூறல் - சொல்லுதல், விற்றல்

- கோரை - புல்வகை
- கோறை - குவளை, பொந்து

- சிரை - சிரைத்தல்
- சிறை - சிறைச்சாலை

- செரு - போர்
- செறு - வயல்

- தருதல் - கொடுத்தல்
- தறுதல் - இறுகக்கட்டுதல்

- தரித்தல் - அணிதல்
- தறித்தல் - வெட்டுதல்

- தூரல் - வருத்தம்
- தூறல் - மழைத்துளி, பழி சொல்லுதல்

- துரவு - கிணறு
- துறவு - துறத்தல்

- பரல் - விதை
- பறல் - பறவை

- பாரை - கடப்பாரை
- பாறை - கற்பாறை

- பெருக்கல் - நிறைத்தல்
- பெறுக்கல் - மிகுத்தல்

- பெரு - பெரிய செயல்
- பெறு - மதிப்புப் பெறு

- பொரு - போர்
- பொறு - பொறுத்திரு

- பொருப்பு - மலை
- பொறுப்பு - பாரம், பொறுமை

- மரித்தல் - இறத்தல்

- மறித்தல் - தடுத்தல்

- மரத்தல் - விறைத்தல்
- மறத்தல் - மறதி

- மருகு - வாசனை தாவரம்
- மறுகு - சிறிய தெரு

- மரு - மலை
- மறு - குற்றம்

- மாரி - மழை
- மாறி - வேறு

- முருக்குதல் - அழித்தல், உருக்குதல்
- முறுக்குதல் - சுழற்றுதல், திரித்தல்

- வரப்பு - எல்லை, வரம்பு
- வறப்பு - வறட்சி, வறுமை

- வரவு - வருமானம், வழி
- வறவு - கஞ்சி

- விரல் - மனித உடலில் உள்ள உறுப்பு
- விறல் - பெருமை, வீரம்

- விரை - விரைந்துசெல்
- விறை - மரத்துப்போதல்

- வெரல் - மூங்கில்
- வெறல் - வெல்லுதல்

- வெரு - அச்சம்
- வெறு - வெறுத்துவிடு

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்.
**தூல், தூழ், தூள் (CCSE4GT/2024)**
**அ) கருப்பம், சுற்று, சபதம்**
ஆ) சபதம், சுவர், தானியம்
இ) ஆலோசனை, ஆணை, வாயில்
ஈ) ஆணை, முற்றுகையிடு, சருமம்

ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.
(CCSE2T/2024)
மாரி, மாறி
அ) பாதி, பறை　　ஆ) மேளம், ஒலித்தல்
**இ) மழை; வேறு**　　ஈ) வீடு, ஒலித்தல்

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு : (AAOGS/2024)
திண் - தின்
அ) பெலன் - உண்　　**ஆ) வலிமை - உண்**
இ) திண்மை - குடி　　ஈ) செயல் - உண்

ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக. (CEGS/2024)
விரை - விறை
அ) விதை - வினை　　**ஆ) விதை - மரத்தல்**
இ) மறத்தல் - மரத்தல்　　ஈ) வித்து - மறத்தல்

பொருள் வேறுபாடு அறிக :
பெரு - பெறு
**அ) பெரிய செயல் - மதிப்புப் பெறு**
ஆ) சிறிய செயல் - மதிப்புப் பெறு
இ) பெரிய செயல் - பெருகுதல்
ஈ) பெரிய செயல் - மதிப்புக் கொடு

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடு (EOIGS/2024)
கிண்ணம் - கின்னம்
**அ) சிறு பாத்திரம் - துன்பம்**　　ஆ) குவளை - கீழ்மை
இ) குவளை - துன்பம்　　ஈ) சிறுபாத்திரம் - மகிழ்ச்சி

கலி, களி, கழி - ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக
(JADLGS/23)
அ) ஒலி, கோல், மகிழ்ச்சி　　ஆ) கோல், மகிழ்ச்சி, ஒலி
**இ) ஒலி, மகிழ்ச்சி, கோல்**　　ஈ) மகிழ்ச்சி, கோல், ஒலி

கரி என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க
(CAGS/2022)
அ) யானை　　ஆ) அடுப்புக்கரி
இ) கருமை　　**ஈ) இறைச்சி**